தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

**இந்தாண்டும் முதல்போக நெல்சாகுபடி தாமதம்! வருண பகவான் வாழ்வு தருவாரா?**




மதுரை : இந்த ஆண்டும் அணைகளில் தண்ணீர் இல்லாததால், முதல்போக குறுவை சாகுபடி என்னாகுமோ, என விவசாயிகள் கவலை கொள்ளத் துவங்கிவிட்டனர்.

மதுரை மாவட்டத்தில் முதல்போக சாகுபடிக்கு, பெரியாறு, வைகை அணைகளில் 400-0 மி.க.அடி இருக்கும் நிலையில், ஜூன் முதல் தேதி தண்ணீர் திறக்கப்படும். இதன்மூலம் 45 ஆயிரம் ஏக்கர் இருபோக சாகுபடி நிலங்களில் முதல்போகம் துவங்கும்.இந்த ஆண்டு மே 19ல் பருவமழை துவங்க வாய்ப்புள்ளது என, வானிலை ஆய்வு மையம் அறிவித்து ஒருமாதமாகியும், போதிய மழை இல்லை.சில நாட்களுக்குமுன் நீர்ப்பிடிப்பு பகுதியில் பெய்த 43 மி.மீ., மழையால், நீர்வரத்து அதிகரித்து, நேற்று முன்தினம்வரை அணைக்கு வினாடிக்கு 1841 கனஅடி தண்ணீர் வந்தது. நேற்று 1460 கனஅடியாக குறைந்தது.

அணையின் நீர்இருப்பு 1593 மில்லியன் கனஅடி. நீர்மட்டம் 114.20 அடி. அணைப் பகுதியில் 3 மி.மீ., மழையும், தேக்கடியில் 1.2 மி.மீ., மழையும் இருந்தது.வைகையின் நீர்மட்டம் 28.58 அடி. நீர் இருப்பு 316 மில்லியன் கனஅடி. அணையில் இருந்து குடிநீருக்காக 40 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

**தொடரும் பாதிப்பு** : கடந்த ஆண்டு இருஅணைகளிலும் 2500 மில்லியன் கனஅடி தண்ணீர் இருந்தபோதே, விவசாயிகளின் வலியுறுத்தல், மழைவரும் என்ற நம்பிக்கையால் குறுவை சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. ஆனால் இன்று 1800 மி.க.அ., என்ற அளவில்தான் உள்ளது. மழை வருவதாகவும் தெரியவில்லை. எனவே விவசாயிகளின் குறுவை சாகுபடி வலியுறுத்தலும் இல்லை.கடந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை பொய்த்ததால் இரண்டாம் போகம் பொய்த்தது. அதற்கு முந்தைய ஆண்டில் இருபருவ மழையும் பொய்த்ததால்

**இருபோகமும் பொய்த்து** : விட்டது. இன்று மூன்றாவது ஆண்டாக வறட்சி நிலவுவதால், விவசாயிகள் தவிக்கின்றனர்.கரும்பு விவசாயிகள் சங்கத் தலைவர் பழனிச்சாமி கூறுகையில், "இந்தாண்டும் மழை பொய்த்தால் விவசாயிகள் ஊரைக் காலி செய்து, வேறு பிழைப்புக்குச் சென்றுவிடுவர். மேலூார், கொட்டாம்பட்டி பகுதியில் இப்போதே பாதித்துள்ள மா, தென்னை, முற்றிலும் கருகிவிடும்," என்றார்.தென்மேற்கு பருவமழைக் காலம் இன்னும் 2 மாதங்களுக்கு உள்ளது. இது காலம் தவறி பெய்தால் யாருக்கும் பலன் இருக்காது.ஜூலை 25க்குள் தண்ணீர் கிடைத்தால், நெல்சாகுபடி செய்யலாம். அதன்பின் சாகுபடி செய்யும் நிலை ஏற்பட்டால், அறுவடை காலத்தில் வடகிழக்கு பருவமழையால் பாதிப்பு ஏற்படும், என்கின்றனர்.

செப்டம்பர் 15ல், 6000 மி.க.அடி உள்ள நிலையில், இரண்டாம் போகத்திற்கு தண்ணீர் திறக்க வேண்டும். அது இந்த ஆண்டு எப்படி இருக்கும் என தீர்மானிக்க முடியவில்லை. முதல்போகம் தாமதித்தால், மொத்தமுள்ள 1.30 லட்சம் ஏக்கர் நிலங்களிலும் ஒரே நேரத்தில் சாகுபடி செய்ய தண்ணீர்.

**வால்பாறையில் 'தட்டியெடுக்கிறது' மழை; கோவை, திருப்பூர் விவசாயிகள் மகிழ்ச்சி**

வால்பாறை : தென்மேற்குப்பருவ மழை தீவிரமடைந்துள்ளதால், சோலையாறு அணையின் நீர்மட்டம் நேற்று காலை 64.74 அடியாக உயர்ந்தது. இதனால், கோவை, திருப்பூர் மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கோவை மாவட்டம் வால்பாறையில், தென்மேற்குப்பருவ மழை கடந்த பத்து நாட்களுக்கு மேலாக பெய்து வருகிறது. இடைவிடாது பெய்த மழையினால் வால்பாறையில் நான்கு வீடுகளின் தடுப்புச்சுவர் இடிந்தன. சிறுவர் பூங்கா ஆற்றோரப்பகுதியில் வசிக்கும் வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது.நீர்ப்பிடிப்பு பகுதிகளில் நீர் வரத்து அதிகரித்துள்ளதோடு, அணைகளின் நீர்மட்டமும் உயர்ந்து வருகிறது. 160 அடி கொள்ளளவு கொண்ட சோலையாறு அணை நீர்மட்டம், நேற்று காலை 64.74 அடியாக உயர்ந்தது. கடந்த இரண்டு நாட்களில் மட்டும் 22 அடி உயர்ந்துள்ளது. அணைக்கு வினாடிக்கு 2,875 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.72 அடி கொள்ளளவு கொண்ட பரம்பிக்குளம் அணையின் நீர்மட்டம், 12.22 அடியாக உயர்ந்தது. அணைக்கு வினாடிக்கு 241 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து வினாடிக்கு 132 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

பி.ஏ.பி.அணைகளின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருவதால், கோவை, திருப்பூர்

மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.வால்பாறையில் நேற்று காலை 8.00 மணி வரை பதிவான மழை அளவு (மி.மீ.,) வால்பாறை_34, மேல்நீராறு_118, கீழ்நீராறு_37, சோலையாறு_65, பரம்பிக்குளம்_43. அதிகபட்சமாக மேல்நீராறு அணைப்பகுதியில் 11 செ.மீ.,மழை பெய்துள்ளது.

**மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி,**

கடம்பத்துார் : கடம்பத்துாரில், மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி நடந்தது.

கடம்பத்துார், வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் நடந்த மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணிக்கு, எம்.எல்.ஏ., ரமணா, ஒன்றிய குழு தலைவர் தெட்சிணாமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகிக்க, ஒன்றியக் குழு துணைத் தலைவர் சுதாகரன் வரவேற்றார். மாவட்ட ஆட்சியர் வீர ராகவ ராவ், பேரணியை துவக்கி வைத்தார். பள்ளி மாணவர்கள், கடம்பத்துார் ஒன்றியத்துக்குட்பட்ட ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் செயலர் ஆகியோர் பங்கேற்ற பேரணி, வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் துவங்கி புதிய வெண்மனம்புதுார் காலனி, மகாத்மா காந்தி நகர், காந்தாமணி நகர், பஜார் வழியாக வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் நிறைவடைந்தது. பேரணியில் மாணவர்கள் மழைநீரை சேகரிப்போம், நிலத்தடி நீரை பெருக்குவோம் என, எழுதிய விளம்பர பதாகைகளை ஏந்தி சென்றனர். பேரணி சென்ற பகுதிகளில் உள்ள வீடுகள் தோறும் மாவட்ட ஆட்சியர் வீர ராகவ ராவ் மற்றும் எம்.எல்.ஏ., ரமணா ஆகியோர் மழைநீர் சேகரிப்பு குறித்து விழிப்புணர்வு பிரசுரங்களை வழங்கினர்.

**'100 சதவீத மானியத்தில் விதைகள் வழங்கப்படும்'**

கூவம் : '100 சதவீத மானியத்தில் விதைகள் வழங்கப்படும்' என, கூவம் கிராமத்தில் நடந்த விவசாயிகள் குறைதீர்வு கூட்டத்தில், வேளாண் அலுவலர் தெரிவித்தார்.

கடம்பத்துார் ஒன்றியம், கூவம் கிராமத்தில் நேற்று நடந்த விவசாயிகள் குறைதீர்வு கூட்டத்திற்கு, ஊராட்சி மன்ற தலைவர் கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார். வேளாண் அலுவலர் சரவணன், உதவி வேளாண் அலுவலர்கள் சின்னச்சாமி, திருநாவுக்கரசு ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில், வேளாண் அலுவலர் இளங்கோ பேசுகையில், 'நெற்பயிர் அறுவடைக்குப் பின் மாற்றுப் பயிர் செய்து, எவ்வாறு மகசூல் செய்வது குறித்தும், தானியங்களை எவ்வாறு சேமித்து, விற்பனையை பெருக்குவது என்பது குறித்தும், அறுவடை செய்த நெல்லை சேமித்து வைத்து, சந்தையில் கூடுதல் விலைக்கு விற்பது குறித்தும்' பேசினார். மேலும், 'மாவட்டத்தில் சிறு, குறு விவசாயிகள் என, தாசில்தார் மூலம் சான்று பெற்று கொடுத்தால், அவர்களுக்கு 100 சதவீத மானியத்தில் சொட்டு நீர் பாசனத்திற்கு காய்கறி மற்றும் தானிய விதைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்' என்றார்.

**பருவமழையை எதிர்பார்த்து காத்திருக்கும் விவசாயிகள்**

தியாகதுருகம் : தியாகதுருகம் பகுதி விவசாயிகள் பயிர் சாகுபடியை துவக்குவதற்காக பருவமழையை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.
பருவமழை கடந்த 2 ஆண்டாக குறைந்து விட்டதால் தியாகதுருகம் பகுதியில் விவசாயம் கடுமையாக பாதித்துள்ளது. நீர்நிலைகள் வறண்டு கிடப்பதால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து கிணற்று நீர் பாசனமும் கைகொடுக்கவில்லை. இதனால் பயிர் சாகுபடி கேள்விக்குறியாகி பலர் கவலையில் உள்ளனர்.
கடந்த மாதம் கோடை மழை பெய்ததால் ஓரளவு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இவ்வாண்டு பருவமழை எதிர்பார்த்த அளவு பெய்யும் என்று எதிர்பார்க்கின்றனர். நிலத்தை திருத்தி பயிர் சாகுபடி செய்ய விவசாயிகள் ஆயத்தமாக உள்ளனர். தென்மேற்கு பருவமழை துவங்கிய நிலையில் எதிர்பார்த்த மழை இப்பகுதியில் பெய்யவில்லை. இதனால் விதைப்பு பணிகள் தாமதமாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக மானாவாரி பயிர் சாகுபடி விவசாயிகள் பருவமழை பெய்யும் என்று மிகுந்த எதிர்பார்ப்பில் காத்திருக்கின்றனர்.

**கடன்களை தள்ளுபடி செய்யக் கோரி விவசாயிகள் சங்கத்தினர் தீர்மானம்**

விழுப்புரம் : தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட பேரவை கூட்டம் நடந்தது.

விழுப்புரம் மாம்பழப்பட்டு ரோடில் உள்ள இந்திய கம்யூ., அலுவலகத்தில் நடந்த கூட்டத்திற்கு, மாவட்ட அமைப்பு குழு கன்வீனர் குப்புசாமி தலைமை தாங்கினார். அமைப்புக்குழு உறுப்பினர் ஜெயராமன் வரவேற்றார். நிர்வாகிகள் அப்பாவு, ராமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.மாநில பொதுச்செயலாளர் முத்தரசன், மாவட்ட செயலாளர் சரவணன், மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் சுப்ரமணியன், அமைப்பு குழு கன்வீனர் கலியமூர்த்தி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.விழுப்புரம் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் வழங்குவதுடன், விவசாய கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும். இந்திரா நினைவு மற்றும் பசுமை வீடு திட்டங்களில் தகுதியான நபர்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும்.தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் காலதாமதமின்றி பயனாளிகளுக்கு ஊதியம் வழங்க வேண்டும். இந்த திட்டத்தில் 200 நாட்களாக வேலை நாட்களை உயர்த்தி, நாள்தோறும் தலா 300 ரூபாய் கூலி வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.அமைப்பு குழு உறுப்பினர் ஜெயசீலி நன்றி கூறினார்.

**மஞ்சள் ஏலம் ஒத்திவைப்புவிவசாயிகள் கடும் அதிருப்தி**

ஆத்தூர்: ஆத்தூர், வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நடக்கவிருந்த மஞ்சள் ஏலம் ஒத்தி வைக்கப்பட்டதால், விவசாயிகள் அதிருப்தி அடைந்தனர்.

ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், பருத்தி, மஞ்சள் மற்றும் எண்ணெய் வித்துகளின் ஏலம் நடந்து வருகிறது.

கடந்த 14ம் தேதி கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நடக்கவிருந்த மஞ்சள் ஏலத்தை காரணமின்றி, கூட்டுறவு சங்க அலுவலர்கள் ஒத்திவைத்தனர். நேற்று முன்தினம் நடக்கவிருந்த மஞ்சள் ஏலத்தையும், கூட்டுறவு சங்க அலுவலர்கள் ஒத்திவைத்ததால், வெளி மாவட்ட பகுதியை சேர்ந்த விவசாயிகள், விற்பனைக்காக கொண்டு வந்த மஞ்சள் மூட்டைகளை இருப்பு வைத்து சென்றனர்.

ஆத்தூர் சுற்று பகுதியை சேர்ந்த விவசாயிகள், கூட்டுறவு சங்கத்தில் இருப்பு வைத்து செல்ல ஆர்வம் காட்டாமல் எடுத்து சென்றனர். தொடர்ந்து, இரண்டு வாரமாக கூட்டுறவு விற்பனை சங்கத்தில், மஞ்சள் ஏலம் ஒத்திவைத்ததால், கூட்டுறவு சங்க அலுவலரின் செயல்பாட்டை கண்டு, விவசாயிகள் அதிருப்தி அடைந்தனர்.

**வறட்சியால் கருகிவரும் கத்திரிச்செடி**

மேட்டூர்: கொளத்தூர் ஒன்றியத்தில் நீடிக்கும் கடும் வறட்சியால், கத்திரி செடிகள் கருகி வருகிறது. அதனால், விவசாயிகள் சோகத்தில் உள்ளனர்.

கொளத்தூர் ஒன்றியத்தில், கோல்நாயக்கன்பட்டி, நவப்பட்டி, கண்ணாமூச்சி, சித்திரப்பட்டி புதூர், தண்டா, தார்க்காடு பகுதியில், நடப்பாண்டு, 200 ஏக்கர் பரப்பளவில், விவசாயிகள் கத்திரி சாகுபடி செய்தனர்.

நிலத்தடி நீர்மட்டம் குறைந்த நிலையில், கோடை மழையும் தவறியதால், கொளத்தூர் அடுத்த செங்கல்மேடு பகுதியில், விவசாயிகள் சாகுபடி செய்த கத்திரி செடிகள் கருகி விட்டது. அறுவடை சமயத்தில், கத்திரி செடிகள் கருகியது, செங்கல்மேடு பகுதி விவசாயிகளை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

**ரூ.50 கோடிக்கு பயிர்க்கடன் இலக்கு: கூட்டுறவுத்துறை அமைச்சர் தகவல்**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கூட்டுறவு துறையின் செயல்பாடுகள் மற்றும் பொது விநியோக திட்ட ஆய்வு கூட்டம், தமிழக கூட்டுறவுத்துறை அமைச்சர் செல்லூர் ராஜூ மற்றும் உயர்கல்வி துறை அமைச்சர் பழனியப்பன் ஆகியோர் தலைமையில், கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடந்தது.கலெக்டர் ராஜேஸ் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில், அமைச்சர் செல்லூர் ராஜூ பேசியதாவது:கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 120 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் உள்பட, மொத்தம், 172 நிறுவனங்கள் கூட்டுறவு துறையின் மூலம் செயல்பட்டு வருகிறது. மாவட்டத்தில், கூட்டுறவு துறையின் மூலம், 495 முழுநேர ரேஷன் கடைகளும், 482 பகுதி நேர ரேஷன் கடைகளும், 32 மகளிர் ரேஷன் கடைகளும் சேர்த்து, மொத்தம், 1,009 ரேஷன் கடைகள் செயல்பட்டு வருகிறது. கூட்டுறவு துறையின் மூலம், 4 லட்சத்து, 9 ஆயிரத்து, 466 ரேஷன் கார்டுகளுக்கு, விலையில்லா அரிசி வழங்கப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில், புதியதாக, 15 முழுநேர ரேஷன் கடைகளும், 41 பகுதி நேர ரேஷன் கடைகளும் திறக்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் செயல்படும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம், அப்பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு, தேவையான கடன் உதவி மற்றும் உரங்கள் தட்டுப்பாடின்றி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

கடந்த, 2013-14ம் ஆண்டில், 42 கோடியே, 72 லட்ச ரூபாய், 9,092 விவசாயிகளுக்கு பயிர் கடன் வழங்கப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட வகுப்பை சேர்ந்த, 1,692 உறுப்பினர்களுக்கு, எட்டு கோடியே, 12 லட்ச ரூபாய் கடன் வழங்கப்பட்டு உள்ளது. 2014-15ம் ஆண்டில், 50 கோடி ரூபாய் பயிர் கடன் வழங்க, இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த விளைபொருட்களை பாதுகாத்து, அப்பொருட்களை, உரிய விலைக்கு விற்பனை செய்து முழுப்பயனடைய வேண்டுமென்ற நோக்கத்தில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கடந்த மூன்று ஆண்டுகளில், 100 மெட்ரிக் டன் கொள்ளளவு உள்ள, 31 கிடங்குகளும், ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு உள்ள இரண்டு கிடங்குகளும், 500 மெட்ரிக் டன் கொள்ளளவு உள்ள இரண்டு கிடங்குகளும் சேர்த்து, மொத்தம், 35 கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டு உள்ளது. இந்த ஆண்டு, 100 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள, 46 கிடங்குகளும், ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள, ஒரு கிடங்கும் சேர்த்து, மொத்தம், 47 கிடங்குககள் கட்டிட ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களின், 590 மகளிர் உறுப்பினர்களுக்கு, தலா, 2,500 ரூபாய் வீதம், 14 லட்சத்து, 75 ஆயிரம் ரூபாய் பங்கு, மூலதன மானியம் விடுவிக்கப்பட்டு, அவர்களின் கடன் பெறு தகுதி உயர்த்தப்பட்டு, 272 உறுப்பினர்கள், 88 லட்ச ரூபாய் கடன் பெற்று பயன் அடைந்து உள்ளனர். இவ்வாறு, கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கூட்டுறவு துறை பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி, நலிந்த ஏழை, எளிய மக்களுக்கு கேடயமாக செயல்பட்டு வருகிறது, என்றார்.

**கொப்பரை தேங்காய்ரூ.1.40 கோடிக்கு ஏலம்**

பெருந்துறை: பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், சனிக்கிழமை கொப்பரை தேங்காய் ஏலம் நடந்தது.

இந்த ஏலத்துக்கு விவசாயிகள், 3,015 மூட்டைகளில், ஒரு லட்சத்து, 46 ஆயிரம் கிலோ எடை கொண்ட, கொப்பரை தேங்காயை கொண்டு வந்திருந்தனர்.

இதில், முதல் தரம் கொப்பரை தேங்காய், ஒரு கிலோ, 99.75 ரூபாய் முதல், 102.65 ரூபாய் வரையும், இரண்டாம் தரம் கிலோ, 73.65 ரூபாய் முதல், 98.80 ரூபாய் வரை

என, மொத்தம், ஒரு கோடியே, 40 லட்சம் ரூபாய்க்கு விற்பனை ஆனது.கடந்த புதன்கிழமையை விட, இரண்டு ரூபாய் கூடுதலாக, கொப்பரை தேங்காய் விற்பனை ஆனது. கடந்த ஒரு வாரமாக, தேங்காய் எண்ணெய் மார்க்கெட் உயர்ந்திருப்பதே, இந்த விலை உயர்வுக்கு காரணம்.

**"கோட்டா' முறையால் வெந்து வீணாகும் பசுந்தேயிலை; நஷ்டத்தால் நொந்து "வாடும்' விவசாயிகள்**

மஞ்சூர் : நீலகிரி மாவட்டத்தில் "கோட்டா' முறை தொடர்வதால், கொள்முதல் மையங்களில் பசுந்தேயிலை வெந்து வீணாகி வருகிறது.

நீலகிரி மாவட்டத்தில் 15 கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள், 200க்கு மேற்பட்ட தனியார் தொழிற்சாலைகள் உள்ளன. தற்போது, பெரும்பாலான தொழிற்சாலைகளில் பசுந்தேயிலை வரத்து அதிகரிப்பால் "கோட்டா' முறை தொடர்ந்து வருகிறது. சில தொழிற்சாலைகளில் அவ்வப்போது விடுமுறை அறிவிக்கப்படுகிறது.இதை தவிர, பசுந்தேயிலைக்கு நிர்ணயிக்கப்படும் விலையும் படிப்படியாக, குறைந்து வருகிறது. இது ஒருபுறமிக்க, "கோட்டா' முறையால் தேயிலை தோட்டத்திலேயே பசுந்தேயிலை "கரட்டு' இலையாக மாறி, வீணாகி வருகிறது. மேலும், தொழிற்சாலைகளில் போதிய "டிரப்' வசதி இல்லாமல், வெளிபகுதியில் "மலைபோல்' கொட்டி வைக்கப்படும் பசுந்தேயிலை அனைத்தும் வெப்பத்தால் வெந்து நாசமாகி வருகின்றன. சிறு, குறு தேயிலை விவசாய சங்க உறுப்பினர் பெள்ளி கூறுகையில், "மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள், அரசின் மேற்பார்வையில் நடந்து வருகிறது. தற்போதுள்ள இக்கட்டான சூழ்நிலைகளை தவிர்க்க, அங்கத்தினர் வழங்கும் பசுந்தேயிலையை முழுமையாக கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்; அதற்கு தகுந்தாற் போல், தொழிற்சாலை உட்கட்டமைப்புகளை நவீன படுத்த வேண்டும். "கோட்டா' முறையை ஒழிக்க வேண்டும்' என்றார்.

**வறட்சி பாதித்த மாவட்டமாகபுதுகையை அறிவிக்க கோரிக்கை**

புதுக்கோட்டை: "புதுகை மாவட்டத்தை, வறட்சி பாதித்த மாவட்டமாக அறிவிக்க வேண்டும்' என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.புதுக்கோட்டையில், மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம், கலெக்டர் மனோகரன் தலைமையி நடந்தது.கூட்டத்தில், முன்னாள் எம்.எல்.ஏ., ராஜசேகரன் கூறியதாவது:புதுக்கோட்டையில் கடந்த, இரண்டு ஆண்டுகளாக மழை பெய்த்ததால், நிலத்தடி நீர் குறைந்து, நீர் நிலைகள், குளங்கள் வறண்டு காணப்படுகிறது. கடந்த ஆண்டு வறட்சி நிலவரம் குறித்த புள்ளி விவரங்களை, தமிழக முதல்வருக்கு அனுப்பி வைத்துள்ளோம். புதுகை மாவட்டத்தில் தைல மரங்கள் மற்றும் கருவேல மரங்கள் பெருவாரியான நிலங்களை ஆக்கிமித்து வளர்ந்துள்ளது.

இந்த மரங்களை வேரோடு அழிக்க, உச்ச நீதிமன்றமும் உத்தரவிட்டுள்ளது. கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவை தொகையை, ஆலைகள் வழங்காவிட்டால் வரும், 26ம் தேதி ஆலைகள் முன், காத்திருக்கும் போரட்டம் நடத்தப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.தொடர்ந்து, கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் கூறியதாவது:தனபதி (விவசாய சங்கம்):மாவட்டத்தில், பருவ மழை பொய்த்ததால், நீர் நிலைகள் வறண்டு காணப்படுகிறது. இதனால், கால்நடைகளுக்கு கூட தண்ணீர் கிடைக்காத அளவுக்கு தட்டுபாடு ஏற்பட்டுள்ளது.

புதுகை மாவட்டத்தில், 5,834 குளங்கள், 812 பாசன குளங்களும், பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ளது. மாவட்ட நிர்வாகம், தமிழக அரசிடம் சிறப்பு நிதி பெற்று, குளங்களை தூர் வாரும் பணிகளை மேற்கொண்டால் தண்ணீர் பிரச்னைக்கு தீர் காண முடியும். மாவட்டத்தில், 64 சதவீதம் விளை நிலங்கள் பயன்பாட்டில் இருந்தன.

வறட்சி மற்றும் பல்வேறு காரணங்களால், ஆறு சதவீதம் பேர் நிலங்களை விற்று விட்டு, இடம் பெயந்துள்ளனர். எனவே, புதுகை மாவட்டத்தை, வறட்சி பாதித்த மாவட்டமாக அறிவிக்க வேண்டும்.ராமதீர்த்தம் (விசாயிகள் கூட்டமைப்பு):"காவிரி பிரச்னையில், தமிழக முதல்வர் அரசியல் செய்கிறார்' என்று கர்நாடக முதல்வர், மத்திய அமைச்சர் அனந்தகுமார், முன்னாள் பிரதமர் தேவகவுடா ஆகியோர் பொறுப்பில்லாமல் பேசியதற்கு, புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் சார்பில், கடும் கண்டனம் தெரிவிக்கப்படுகிறது.முத்துராமலிங்கம்:டெல்டா மாவட்டத்தில், 12 மணி நேர மின் விநியோகம் வழங்கப்படும் நேரத்தில், புதுகை மாவட்ட டெல்டா பகுதியில், வழங்கவில்லை. 110 கண்மாய் சீரமைப்புக்காக, கலெக்டர் கூட்டம் நடத்த வேண்டும்.

டி.ஆர்.ஓ., மாரிமுத்து, வேளாண்மை இணை இயக்குநர் ஷாஜகான் மற்றும் பலர் கல்ந்து கொண்டனர்.

**அக்னி முடிந்தும் கொளுத்தும் வெயிலால்...அதிர்ச்சி!மாவட்டத்தில் விவசாயிகள் கடும் அதிருப்தி**

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் கோடை முடிந்தும், 90 டிகிரிக்கு மேல் கொளுத்தும் வெயில் காரணமாக, விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கவலை அடைந்துள்ளனர்.

தர்மபுரி மாவட்டம் மலைக்கிராமங்கள் மற்றும் கிராமங்களை அதிகம் கொண்ட, விவசாயத் தொழிலை பிரதானமாக கொண்ட மாவட்டம் ஆகும். ஆந்திரா மற்றும் கர்நாடக எல்லை பகுதியில் உள்ள தர்மபுரி மாவட்டத்தில், வழக்கமாக, கோடை மழை முக்கிய பங்கு வகிக்கும்.

இந்தாண்டு, மாவட்டத்தில் கோடை மழை சற்று தாமதமாக, துவங்கினாலும், விவசாயிகளுக்கு, ஓரளவுக்கு கை கொடுத்தது. ஆனால், ஜூன் முதல் வாரத்தில் பெய்ய வேண்டிய, தென்மேற்கு பருவமழை, கடந்தாண்டை போன்றே, தற்போதும், விவசாயிகளை ஏமாற்றி வருகிறது.

இதனால், கோடை மழையில் பயிர் சாகுபடிக்கான ஆயத்த பணிகளை, துவங்கிய, பெரும்பாலான விவசாயிகள், தென்மேற்கு பருவமழை கால தாமதம் காரணமாக, சாகுபடியை, தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளனர். பாசன வசதி உள்ள விவசாயிகள் மட்டும், நெல், கரும்பு உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதுகுறித்து, நல்லம்பள்ளியை சேர்ந்த விவசாயி குமரன் கூறியதாவது:

தர்மபுரி மாவட்டத்தில் சுமார், ஒரு லட்சத்து, 70 ஆயிரம் ஹெக்டேர் விவசாய நிலம் உள்ளது. இதில், 70 ஆயிரம் ஹெக்டேருக்கு மேல், கேழ்வரகு, பருத்தி, துவரை, மரவள்ளி கிழங்கு, சாம்பை உள்ளிட்ட பயிர்கள், பருவ மழையை நம்பி, மானாவாரியாக சாகுபடி செய்யப்படுகிறது.

கடந்தாண்டு மாவட்டத்தில் எதிர்பார்த்த அளவு தென்மேற்கு பருவ மழை பெய்ய வில்லை. இதனால், ஆடி பட்ட சாகுபடிக்கு விவசாய நிலங்களை தயார்படுத்தி வைத்திருந்த விவசாயிகள், ஏமாற்றம் அடைந்தனர். இந்நிலையில், இந்தாண்டு, தர்மபுரி மாவட்டத்தில், ஓரளவுக்கு கோடைமழை பெய்தது.

இதனால், விவசாயிகள் மானாவாரி பயிர்களை தென்மேற்கு பருவமழையின் போது, சாகுபடி செய்த, நிலங்களை உழுது தயார் செய்து வந்தனர். ஆனால், மாவட்டத்தில் விவசாயிகள் எதிர்பார்த்த படி, தென்மேற்கு பருவமழை உரிய காலத்தில் துவங்கவில்லை. இதனால், மானாவாரி பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள், சாகுபடி பணிகளை தற்காலிகமாக ஒத்தி வைத்துள்ளனர்.இதேபோன்று, அணை மற்றும் ஏரி பாசன பகுதிகளில் உள்ள விவசாயிகளும், நெல், கரும்பு போன்ற பயிர் சாகுபடி பணிகளை, தென்மேற்கு பருவமழை காலதாமதம் ஏற்பட்டுள்ளதால், நடவு பணிகளை தற்காலிகமாக ஒத்தி

வைத்துள்ளனர். கடந்த சில தினங்களாக, கேரளா மற்றும் தமிழகத்தின் மேற்கு தொடர்ச்சி மழை மற்றும் அதனை ஒட்டி உள்ள பகுதிகளில் தொடர்ந்து பருவ மழை பெய்து வருகிறது.

இதனால், இன்னும் சில தினங்களில், தர்மபுரி மாவட்டத்திலும் தென்மேற்கு பருவமழை பெய்யும் என விவசாயிகள் எதிர்பார்த்து காத்துள்ளனர் என, அவர் கூறினார்.

**வருகிறது மழை காலம்; வரவேற்க தயாரா?**

சின்னாளபட்டி : மழைக்காலம் துவங்கவுள்ள நிலையில், மழைநீர் சேகரிப்பிற்கான பணிகளை அரசு முடுக்கிவிட்டுள்ளது.

அரசு அலுவலகங்கள், வீடுகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை சரியான முறையில் அமைக்க வலியுறுத்தப்பட்டுள்ளது. இதனை முழுமையாக அமலாக்குவதற்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இந் நிலையில், மழைநீர் சேகரிப்பை வலியுறுத்தும், வாசகங்கள் கொண்ட 'பிளக்ஸ் பேனர்கள்', அனைத்து பேரூராட்சிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இவற்றில், 'வருகிறது பருவ மழை, வரவேற்க தயாரா?' 'மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை புனரமைப்போம்,' 'மழைநீரை சேகரிப்போம், தண்ணீர் பிரச்னைக்கு தீர்வு காண்போம்' என்ற வாசகங்கள் இடம் பெற்றுள்ளன. மற்றொரு பேனரில், எதிர்வரும் மழைகாலம்,எண்ணற்ற நன்மைகளை வழங்கும் காலம், அருகி வரும் நீர்வளத்தை மேம்படுத்திட,பெருகி வரும் மழை நீரை சேகரிப்போம் என்ற வாசகங்களும் இடம் பெற்றுள்ளன.

**பெரியகுளம் விவசாயிகளுக்கு கசக்கும் கரும்பு**

தேவதானப்பட்டி : பெரியகுளம் தாலுகாவில் வறட்சியால் கரும்பு வயல்கள் கருகி வருகின்றன. இதனால் விவசாயிகளுக்கு கரும்பு கசக்கிறது.பாதிக்கப்பட்டோருக்கு நிவராணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேனி மாவட்டத்தில் பரவலாக கரும்பு சாகுபடி நடந்து வருகிறது. பெரியகுளம் ஒன்றியம், வடுகபட்டி,மேல்மங்கலம், ஜெயமங்கலம், சில்வார்பட்டி, கோயில்புரம், அ.வாடிப்பட்டி, தேவதானப்பட்டி, லட்சுமிபுரம்,ரெங்கநாதபுரம் உட்பட பல கிராமங்களில் கரும்பு சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். இப்பகுதியில் விளையும் கரும்பு அருகில் உள்ள ஆலைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.கடந்த 3 ஆண்டுகளாக, இப்பகுதியில் பருவமழை தவறியது.இதனால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்துவிட்டது. விவசாய கிணறுகள் வறண்டு விட்டன. 900அடிவரை போர் போட்டும் நீர் கிடைக்கவில்லை. இந்நிலையில் குறைந்த அளவு நீரைக் கொண்டு, மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் சில விவசாயிகள் கரும்பு நடவு செய்துள்ளனர்.ஆனால் விவசாயிகள் எதிர்பார்த்தது போன்று பருவமழைபெய்யவில்லை.

பத்து மாதங்கள் தொடர்ந்து போதிய அளவு நீர் செலுத்தினால் தான் முழு அளவு பலனும் கிடைக்கும்.ஆனால் கரும்பு நடவு செய்து ஆறு மாதங்கள் ஆன நிலையில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால் நீரின்றி பல ஏக்கர் கரும்பு வயல்கள் கருகி வருகின்றன. இதனால் விவசாயிகள் பொருளாதார இழப்பு ஏற்பட்டு பாதிக்கப்பட்டுள்ளனர்.

**நிவாரணம் வேண்டும்:** தேனி மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளாக தென்னை, வாழை, நெல், கரும்பு என அனைத்து பயிர் சாகுபடி விவசாயிகளும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் வறட்சி நிவாரணம் என்பது தேனி மாவட்டதில்

இது வரை வழங்கப்படவில்லை. தென்னை சாகுபடியால் பாதிப்பு குறித்து மட்டும் புள்ளிவிபரம் சேகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் மற்ற பயிர்கள் பாதிப்பு பற்றி இது வரை மாவட்ட நிர்வாகம் கண்டு கொள்ளவில்லை. குறிப்பாக கரும்பு சாகுபடியாளர்கள் கடுமையான பொருளாதார பாதிப்புக்கு ஆளாகி உள்ளனர்.எனவே தேனி மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் பற்றிய விபரங்களை சேகரித்து வறட்சி நிவாரணம் வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**பெரியாறு அணை பகுதியில் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி! முதல் போக நெல் நடவு பணிகளில் மும்முரம்**

கூடலுார் : பெரியாறு அணையில் பெய்து வரும் மழையால், அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருவதைத் தொடர்ந்து விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இதனால், முதல் போக நெல் சாகுபடிக்கான நடவு பணிகளில் தீவிரம் காட்டத் துவங்கியுள்ளனர்.

கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளில், பெரியாறு அணை நீரை நம்பி, 14 ஆயிரத்து 707 ஏக்கர் பரப்பளவில் இரு போக நெல் சாகுபடி விவசாய நிலங்கள் உள்ளன. ஒவ்வொரு ஆண்டும், ஜூன் மாதத்தில் திறந்து விடும் நீரின் மூலம், முதல் போக நெல் சாகுபடி பணிகள் துவங்கும். சில ஆண்டுகளில்,பெரியாறு அணை நீர்மட்டம் மிகக் குறைவாக இருக்கும்போது, நீர்திறப்பு சற்று தாமதமாகும்.அந்த நேரங்களில் முதல் போக நெல் சாகுபடிக்கான நடவு பணிகளும் தாமதமாக துவங்கும். ஆனால்,இந்த ஆண்டு ஜூன் 1ல், கம்பம் பள்ளத்தாக்கு முதல் போக நெல் சாகுபடிக்காக, 200 கன அடி நீர் திறந்து விடப்பட்டது. நீர் திறக்கும் போது அணையின் நீர்மட்டம் 113.80 அடியாக இருந்தது. அதன்பின், தொடர்ந்து மழையின்றி அணையின் நீர்மட்டம் குறைந்து வந்தது. பெரியாறு அணை நீரை

நம்பி, நாற்றாங்கால் அமைத்து, நெல் நாற்றுகள் வளர்க்கும் பணியில் ஈடுபட்டிருந்த விவசாயிகள் கவலையடைந்தனர்.நீர்மட்டம் குறைந்து வந்ததால் முதல் போக நெல் சாகுபடி செய்வதற்கே தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் சூழ்நிலை உருவானது.

இந்நிலையில், கடந்த 3 தினங்களாக பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் அணைக்கு நீர்வரத்து வெகுவாக அதிகரித்து நீர்மட்டமும் உயரத் துவங்கியுள்ளது. கடந்த சில தினங்களாக கவலையில் இருந்த, கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள், தற்போது பெரியாறு அணை நீர்மட்டம் உயர்ந்து வருவதைத் தொடர்ந்து, நெல் நடவுப் பணிகளில் தீவிரம் காட்டத் துவங்கியுள்ளனர். கூடலூர், வெட்டுக்காடு, தாமரைக்குளம், ஒழுகுபுளி, கருநாக்கமுத்தன்பட்டி, குள்ளப்பகவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி, கம்பம், உத்தமபாளையம், சின்னமனூர் பகுதிகளில், வயல்களில் நெல் நடவு செய்வதற்காக, தொழி உழவு அடிக்கும் பணியில் மும்முரமாகியுள்ளனர். இன்னும் ஒரு வாரத்திற்கு இந்த மழை தொடர்ந்தால், நீர்மட்டம் வெகுவாக உயர்ந்து, தண்ணீர் பற்றாக்குறையின்றி, முதல்போக நெல் சாகுபடியை செய்யமுடியும் என்ற மகிழ்ச்சியில் விவசாயிகள் உள்ளனர்.

**கத்தரியை தாக்கும் "செல்' பூச்சிகள்; விவசாயிகள் கவலை**

காரைக்குடி : சாக்கோட்டை அருகே கத்தரியில் புதுவித "செல்' பூச்சிகள் குடி கொண்டு, அவற்றை அழித்து வருவதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். சாக்கோட்டை அருகே பெரியகோட்டை, பெத்தாட்சிகுடியிருப்பு, பீர்க்கலைக்காடு பகுதிகளில், கத்தரி, வெண்டை, கொத்தவரங்காய் விளைச்சல் நடக்கிறது. வடகிழக்கு பருவமழை காலங்களில், நெல் விவசாயமும், ஏப்ரல், மே, ஜூனில் காய்கறி விளைச்சல் நடக்கும். கடந்த இரண்டு ஆண்டுகளாக போதிய மழையின்றி, ஆழ்துழாய் கிணறு வைத்துள்ளோர் மட்டுமே, காய்கறி விவசாயத்தில்

ஈடுபடுகின்றனர். கடந்த மாதம் கோடை மழை ஓரளவே பெய்தது. தொடர் மழையின்றி, வெயில் வாட்டுகிறது. இதனால், கத்தரி செடியில் வெள்ளை கலரில், ஒரு வித செல் பூச்சிகள் உருவாகி, அதன் இலையின் அடியில் கூடு கட்டி வாழ்கின்றன. இதனால், செடியின் குருத்து பகுதி வெள்ளை அடித்து, காய்ப்பு தன்மை குறைகிறது.

பெத்தாட்சி குடியிருப்பு விவசாயி முத்து கூறும்போது: கத்தரி "காய்ச்சாலும் காய்க்கும், ஏய்ச்சாலும் ஏய்க்கும்' என்பது போல, இந்த ஆண்டு ஓரளவு மழை பெய்துள்ளது, அதனால் நன்கு காய்க்கும் என எதிர்பார்த்தோம். ஆனால், சமீபத்தில் பெய்த கோடை மழைக்கு பின், அடிக்கும் வெயிலால், "செல்பூச்சி' தாக்கியுள்ளது. கத்தரி காயின் காம்பு கருப்பாகி விடுகிறது.

இலைகளின் குருத்து பகுதி வெள்ளை நிறமாகிறது. இதனால், கத்தரி விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளோம், என்றார். தோட்டக்கலை உதவி இயக்குனர் சாந்தி கூறும்போது: கத்தரியின் ஊடே, சாமந்தி பூ பத்து வரிசைக்கு ஒரு வரிசை பயிரிட்டால், இது மாதிரியான பூச்சிகள் வர வாய்ப்பில்லை. "இனிடா குளோடிரீட்' மருந்தை, 1 லிட்டர் தண்ணீரில் ஒரு மி.லி., கலந்து தெளிக்கவும். குறிப்பிட்ட பகுதியில், ஆய்வு செய்யப்படும், என்றார். செட்டிநாடு மானவாரி ஆராய்ச்சி நிலைய ஆராய்ச்சியாளர் பரமேஸ்வரன் கூறும்போது: வெள்ளை ஈ எனப்படும், பூச்சி பரவுவதால், காய்கள், இலை சுருங்கி வருகிறது. ரகம் மாறியிருந்தால், இந்த நோய் தாக்கும். மருந்து தொடர்ந்து அடிக்கவேண்டும், என்றார்.

**சிறு தானிய உணவு விழா**

விருதுநகர் : விருதுநகர் இயற்கை நலவாழ்வு சங்கம் சார்பில், சிறு தானிய உணவு விழா நடந்தது. இதில், மதுரை அமிர்தம், கும்பகோணம் ரமேஷ் ஆகியோர் இயற்கை (தானிய) உணவு தயாரிக்கும் முறையை விளக்கினர். ஊட்டச்சத்தும், மருத்துவ நற்குணமும் வாய்ந்த சிறு தானியங்களான கம்பு, கேழ்வரகு, சோளம்,

தினை, சாமை, குதிரைவாலி, வரகு, பனி வரகு முதலியவற்றின் மூலம் உணவு தயாரித்தனர். கம்பு லட்டு, மாப்பிள்ளை சம்பா அரிசி கொழுக்கட்டை, கேப்பை புட்டு, சோளகஞ்சி, குதிரைவாலி பிரியாணி, தினை பாயாசம் முதலிவற்றை தயாரித்து அசத்தினர். கல்லூரி மாணவிகள் உட்படபலர் கலந்து கொண்டனர். பல ஆயிரம் நூற்றாண்டுகளுக்கு முன்பே, நம் முன்னோர்கள் ஆராய்ந்து, தெளிந்து வகுத்த, பாரம்பரிய உணவு மற்றும் வாழ்வியல் நெறிமுறைகளை அப்படியே பின்பற்றினால், நாம் முழு நலத்துடன் நீண்ட காலம் வாழலாம் என இதில் வலியுறுத்தப்பட்டது.

தினமணி

உணவு உற்பத்தி: கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு அதிகம்

திருவள்ளூர்:

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் இம்மாவட்டம் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு அதிக உணவு உற்பத்தி செய்துள்ளதற்காக விவசாயிகளை மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவ ராவ் பாராட்டினார்.

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை காலை மாவட்ட ஆட்சியர் கொ. வீரராகவ ராவ் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், அவர் பேசியது:
இம்மாவட்டத்தில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு உணவு உற்பத்தியில் இலக்கை விட 40 சதவீதம் வரை அதிகமான அளவு சாதனை அடைந்ததற்காக விவசாயிகளுக்குப் பாராட்டுகள்.

இந்த ஆண்டு இருக்கிற மழை நீரைக் கொண்டு கடந்த ஆண்டை விட குறையாமல் உற்பத்தி இலக்கை அடைய விவசாயிகள் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

மேலும் ஈக்காடு செல்லும் சாலைப் பணிகளை விரைவில் முடிக்கவும் ஏரிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இறால் மற்றும் வண்ண மீன் பண்ணைகளுக்கு சட்டத்துக்குப் புறம்பாக மின் இணைப்பு வழங்கக் கூடாது என மின்சாரத் துறை அலுவலர்களை கேட்டுக் கொண்டார். இதைத் தொடர்ந்து கடந்த மாதத்தில் பெறப்பட்ட விவசாயிகளுடைய கோரிக்கை மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குநர் பாபு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கோ. சுப்பிரமணியன், அம்பத்தூர் கோட்டாட்சியர் மாரிமுத்து, திருத்தணி கோட்டாட்சியர் பாண்டியன் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள், மாவட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

மரம் ஏறும் கருவியை பயன்படுத்த கல்லூரி மாணவிகளுக்கு பயிற்சி

தேனி,

சின்னமனூர் அருகே சீப்பாலகோட்டையில் காமாட்சிபுரம் சென்டெக்ட் வேளாண்மை அறிவியல் மையம் சார்பில் குள்ளப்புரம் வேளாண்மை தொழில்நுட்ப கல்லூரி மாணவிகளுக்கு தென்னை மரம் ஏறும் கருவியை பயன்படுத்தி மரம் ஏறுவதற்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

தென்னை மரம் ஏறும் கருவியை கையாள்வது குறித்து சென்டெக்ட் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் ப. மாரிமுத்து தலைமையில், பயிற்றுநர் வீரக்குமார் மாணவிகளுக்கு செயல்விளக்கப் பயிற்சி அளித்தார்.

தென்னை மரம் ஏறும் கருவியின் பயன்பாடு குறித்து தொழில்நுட்ப வல்லுநர்கள் சந்திரசேகரன், விஜயமுருகன் ஆகியோர் விளக்கினர். குள்ளப்புரம் வேளாண்மை

கல்லூரி உதவிப் பேராசிரியர் விஜய்பாபு உடனிருந்தார்.

வேலி கருவேல் மரங்களை அகற்ற அனுமதி:ஊராட்சித் தலைவர் கோரிக்கை

சிவகங்கை:

வேலி கருவேல் மரங்களை அகற்றிவிட்டு பலன் தரும் இதர மரங்களை நட்டு பசுமை கிராமமாக மாற்ற அரசு அனுமதிக்க வேண்டும் என படமாத்தூர் ஊராட்சித் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து சிவகங்கை வருவாய் வட்டாட்சியரிடம் ஊராட்சித் தலைவர் அ.இருளாண்டி வெள்ளிக்கிழமை கொடுத்துள்ள கோரிக்கை மனுவில் கூறியுள்ளதாவது:

வேலி கருவேல் மரம் சுற்றுச்சூழல், மழைவளம், நிலத்தடி நீர், இதர மரம் வளர்வதை முற்றிலும் பாதித்து வருகிறது.

படமாத்தூர் ஊராட்சி குரங்கணி கண்மாய் கரை பாசன வாய்க்கால் தூர் வாரவும், மயானச் சாலைக்கு தெரு விளக்கு அமைக்கவும், வாகனங்கள் செல்வதற்கும் இந்த மரங்கள் இடையூறாக உள்ளன.

வேலி கருவேல் மரங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கக் கேட்டு கடந்த 29.7.2008 முதல் 4.11.2013 வரை பத்துக்கும் மேற்பட்ட முறை விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் 1ஆம் தேதி நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் கருவேல் மரங்களை அகற்றக்கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பொது நல வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை இம்மரங்களை அடியோடு அகற்ற உத்தரவிட்டுள்ளது.

எனவே படமாத்தூர் ஊராட்சியில் வேலி கருவேல் மரங்களை அகற்ற அரசு தகுந்த உத்தரவினை வழங்க வேண்டும் என தனது மனுவில் கேட்டுக் கொண்டுள்ளார்.

## பதநீர் மூலம் கருப்பட்டி தயாரிக்கும் பயிற்சி

சிவகங்கை:

சிவகங்கை மாவட்ட சிறுதொழில்கள் சங்கம், மாவட்ட பனைபொருள் உற்பத்தியாளர் சங்கம் இணைந்து பதநீர் மூலம் கருப்பட்டி தயாரிப்பது குறித்த செயல்முறை பயிற்சி முகாம் தொழில்பேட்டையில் நடைபெற்றது.

முகாமினை சிவகங்கை நகர்மன்றத் தலைவர் எம்.அர்ச்சுணன் தலைமை வகித்து துவக்கி வைத்தார். சிவகங்கை மாவட்ட பனைவெல்ல உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத் தலைவர்களின் கூட்டமைப்புத் தலைவர் எஸ்.கஸ்பார், மாவட்ட சிறுதொழில் சங்க செயலாளர் கே.டி.கண்ணப்பன் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் ராம.அரங்கண்ணல், மேலாளர் எஸ்.கணேசன், ஐ.ஓ.பி.மேலாளர் ராமசுப்ரமணிய சாஸ்திரி, பனைவெல்ல கூட்டுறவு சம்மேளன இயக்குநர்கள் பி.தேரிபாண்டியன், எம்.சதீஸ்குமார், வி.சேகர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கன்னிராசபுரம் மாரியம்மாள் மற்றும் ஜானகி மகளிர் குழுவினர் கருப்பட்டி தயாரிப்பது குறித்த செயல்முறை விளக்கப் பயிற்சி அளித்தனர்.

ராமநாதபுரம்-சிவகங்கை மாவட்ட பனைவெல்ல கூட்டுறவு சம்மேள துணைப் பெருந்தலைவர் எம்.முத்துக்குமார் வரவேற்றார். மாவட்ட பனைவெல்ல உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத் தலைவர்களின் கூட்டமைப்பு அமைப்பாளர் எஸ்.பழனிக்குமார் நன்றி கூறினார்.

## இயற்கை உணவு திருவிழா

விருதுநகர்:

விருதுநகரில் இயற்கை நலவாழ்வு சங்கம் மற்றும் வி.எம். ஞானசபாபதி-சரஸ்வதி

சேரிடீஸ் டிரஸ்ட் ஆகியவை இணைந்து இயற்கை உணவுத் திருவிழாவை ஞாயிற்றுக்கிழமை நடத்தின.

விருதுநகர் அனுமான் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு இயற்கை நலவாழ்வு சங்கத்தின் தலைவர் முத்துமணி தலைமை வகித்தார். செயலர் செல்வராஜன் முன்னிலை வகித்தார். இதில், இயற்கை வேளாண்மை நம்மாழ்வர் நலவாழ்வு மைய உணவியல் வல்லுநர் மருத்துவர்கள் ஜீ. மாறன், ச. ரமேஷ் மற்றும் அமிர்தவல்லி குழுவினர் மருத்துவ குணம் வாய்ந்த சிறு தானிய உணவு தயாரித்தல் குறித்து பேசினர்.

இந்த நிகழ்ச்சியில் சிறு தானிய உணவு விரும்பிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் திரளாக கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை விருதுநகர் இயற்கை நலவாழ்வு சங்கத்தினர் மற்றும் வி.எம். ஞானசபாபதி- சரஸ்வதி சேரிடீஸ் டிரஸ்ட் அமைப்பினர் ஆகியோர் செய்திருந்தனர்.

"விவசாயிகள் வயல்களில் மின்சார வேலி அமைப்பதை தவிர்க்க வேண்டும்'

விருதுநகர்:

விவசாயிகள் பயிர்களை பாதுகாக்க வயல்களில் மின்சார வேலி அமைப்பதை தவிர்க்க வேண்டும் என மேற்பார்வை பொறியாளர் சுரேந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

விருதுநகர் மாவட்டத்தில் மின் விபத்துகளை தடுப்பதற்கும், மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துவதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில், வீடுகளில் ஏற்படும் விபத்துக்களை தவிர்ப்பதற்கு குறிப்பிட்ட பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்ற வேண்டும் என மேற்பார்வை பொறியாளர் சில ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

ஒவ்வொரு நுகர்வோரும் மின்கசிவு தடுப்பான்களை மெயின் போர்டில் பொருத்தி

மின் கசிவால் ஏற்படும் விபத்தை தடுக்க வேண்டும். தொலைக்காட்சி ஆண்டனாவை வீட்டுக்கு அருகே செல்லும் மேல் நிலைக் கம்பிகளுக்கு அருகில் அமைக்கக் கூடாது. ஒவ்வொரு வீட்டு இணைப்புக்கும் சரியான நில இணைப்பு (எர்த் பைப்) அமைத்து, அதை குழந்தைகள், கால்நடைகள் தொடாத வகையில் பராமரிக்க வேண்டும். மின் கம்பத்தின் மீது கொடி கட்டி துணிகளை உலர வைக்கும் செயலை செய்யக் கூடாது.

அதே போல் குளியலறையிலும், கழிப்பிட வளாக அறையில் ஈரமுள்ள பகுதியில் மின் அழுத்தான்களை (ஸ்விட்ச்) பொறுத்தக் கூடாது. மின்கம்பம், அவற்றை தாங்கிப் பிடிக்கும் கம்பிகளிலோ கால்நடைகளை கட்டக் கூடாது, அதே போல் பந்தல் தூண்களாகவும் பயன்படுத்தக் கூடாது. வீட்டு மின் இணைப்பு பணிகளை அதற்கான உரிமம் பெற்ற ஒப்பந்ததாரர்கள் மூலமே செய்ய வேண்டும். மின் அழுத்தான்கள் அனைத்தும் ஐ.எஸ்.ஐ. முத்திரை பெற்ற மின்சாதன பொருள்களாக பயன்படுத்த வேண்டும்.

மின்சார பிளக்குகளை பொருத்தும் போதும், எடுக்கும் முன்பும் மின் இணைப்பை துண்டித்து விடுங்கள். குளிர்சாதன பெட்டி, கிரைண்டர் போன்ற வீட்டு உபயோக மின் சாதனங்களுக்கு 3 பின் பிளக்குகளை பயன்படுத்தியே மின் இணைப்பு கொடுக்க வேண்டும். உடைந்த மின் அழுத்தான்களையும், பிளக்குகளையும் உடனே மாற்றிவிட வேண்டும். எக்காரணம் கொண்டும் பழுதான மின்சாதன பொருள்களை உபயோகிக்கக் கூடாது.

கேபிள் டிவி இணைப்பு வயர்களை மேல்நிலை கம்பிகளுக்கு அருகில் கொண்டு செல்ல வேண்டாம். சுவற்றின் உள்பகுதியில் மின்சாரம் கொண்டு செல்வதற்கு பிவிசி குழாய்கள் பதிக்கப்பட்டிருந்தால், அக்குறிப்பிட்ட பகுதியில் ஆணி அடிப்பதை தவிர்க்க வேண்டும்.

மின்மாற்றிகள், துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள பகுதியில் பாதுகாப்பு வேலி அருகே சிறுநீர் கழிக்க செல்ல வேண்டாம். மேல்நிலை மின்சார கம்பிகளுக்கு இடையே கட்டடங்களை போதுமான இடைவெளி விட்டு அமைக்க

வேண்டும். வயல்களில் மின்வேலி அமைப்பதை தவிர்க்க வேண்டும். எனவே மின் நுகர்வோர் மேற்குறிப்பிட்ட ஆலோசனைகளை பின்பற்ற வேண்டும் என்று மேற்பார்வை பொறியாளர் சுரேந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

சிறுவாணி அணையின் நீர்மட்டம் 3.5 மீட்டர் உயர்வு

கோவை:

சிறுவாணி அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் கனமழை காரணமாக அணையின் நீர்மட்டம் 3.5 மீட்டர் உயர்ந்துள்ளது.

மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள சிறுவாணி அணை, கோவை நகரின் முக்கிய குடிநீர் ஆதாரமாக விளங்கி வருகிறது. போதிய மழையின்மை காரணமாக அணையின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்தது. இதனால் மாநகர மக்களுக்கு வழங்கும் குடிநீரின் அளவும் குறைந்தது. அணையின் நீர்மட்டம் கடல் மட்டத்திலிருந்து 864.20 அடியாக இருந்தது.

தற்போது, கேரளத்தில் பருவமழை தொடர்ந்து பெய்து வரும் நிலையில் மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள சிறுவாணி அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும் தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

இதனால் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. தொடர்ந்து 50 மி.மீ.க்கு குறைவில்லாமல் மழை பெய்து வருகிறது. கடந்த 5 நாள்களில் மட்டும் அணையின் நீர்மட்டம் 3.5 மீட்டராக உயர்ந்துள்ளது. தொடர்ந்து மழை பெய்து வருவதால் அணையின் நீர்மட்டம் மெல்ல உயர்ந்து வருகிறது. தற்போதைய நிலவரப்படி அணையின் நீர் மட்டம் 867.4 அடியாக உள்ளது.

வேளாண் உணவு பூங்கா, மூலிகை ஏற்றுமதி மண்டலம் அமைக்க வேண்டும்

ஈரோடு:

பெருந்துறையில் வேளாண் உணவு பூங்கா, தாளவாடியில் மூலிகை ஏற்றுமதி மண்டலம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஈரோடு மாவட்ட அனைத்து தொழில் வணிக சங்கங்களின் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

கூட்டமைப்பின் பொதுக்குழுக் கூட்டம் தலைவர் என்.சிவநேசன் தலைமையில் ஈரோட்டில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. ஈரோடு தங்கும் விடுதி உரிமையாளர்கள் சங்கத் தலைவர் எஸ்.கே.ராமசாமி முன்னிலை வகித்தார். சாய மற்றும் கெமிக்கல் உரிமையாளர்கள் சங்கத் தலைவர் எஸ்.செங்குட்டுவன் வரவேற்றார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: மத்திய, மாநில அரசுகள் இணைந்து நாட்டின் வளர்ச்சிக்கு தேவையான திட்டங்களை நிறைவேற்ற வேண்டும்.

நதிநீர் இணைப்புக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். கரும்பிலிருந்து எத்தனால் தயாரித்து, கச்சா எண்ணெய் இறக்குமதியை குறைக்க வேண்டும். பெருந்துறை சிப்காட்டில் வேளாண் உணவு பூங்கா, தாளவாடியில் மூலிகை பூங்கா மற்றும் ஏற்றுமதி மண்டலம், சத்தியில் வாசனைத் திரவிய தொழிற்சாலை, அனைத்து தாலுகா தலைநகரங்களிலும் குளிர்சாதனக் கிடங்கு அமைக்க வேண்டும்.

பருத்தியை அத்தியாவசியப் பொருள்களின் பட்டியலில் சேர்க்க வேண்டும். சில்லறை வணிகத்தில் அந்நிய நேரடி முதலீடு சட்டத்தை திரும்பப் பெற வேண்டும். சாயகழிவுநீரை கடலில் கலக்கும் திட்டத்தை செயல்படுத்த வேண்டும்.

மாவட்ட விற்பனை வரி ஆலோசனைக் குழுவை புதுப்பித்து செயல்படுத்த மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஈரோட்டிலிருந்து சென்னைக்கு இரவு 9 மணிக்கு செல்லும் ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயிலை பயணிகளின் நலன் கருதி, 10 மணிக்கு புறப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஈரோட்டில் 80 அடி சாலையை போக்குவரத்துக்கு திறந்துவிட வேண்டும்.

கனிமார்கெட் வளாகத்தில் ஒருங்கிணைந்த ஜவுளி வணிக வளாகம், பெருந்துறையில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா தொடங்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முன்னதாக, கூட்டமைப்பின் பொதுச் செயலர் வி.கே.ராஜமாணிக்கம் ஆண்டறிக்கை வாசித்தார். பொருளாளர் வி.கே.குமாரசாமி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## கொப்பரை விலை தொடர்ந்து உயர்வு

கோபி:

கோபி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கொப்பரை விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கோபி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வாரம்தோறும் கொப்பரை ஏலம் நடைபெறுகிறது. இதில் கோபி, நம்பியூர், கள்ளிப்பட்டி, பங்களாபுதூர், கரட்டுப்பாளையம், குருமந்தூர், ஆயிபாளையம் காராப்பாடி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் இருந்து நூற்றுக்கணக்கான விவசாயிகள் கலந்து கொள்வது வழக்கம்.

இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் 88 விவசாயிகள் கலந்து கொண்டனர். 359 மூட்டை கொப்பரை வரத்து இருந்த நிலையில், ஒரு கிலோ கொப்பரை விலை அதிகபட்சமாக ரூ.100.69 க்கும், குறைந்தபட்சமாக ரூ.96.93 க்கும் விலை போனது.

கடந்த வாரம் 171 மூட்டை கொப்பரை வந்திருந்தது. கிலோ ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.97.89 க்கும், குறைந்தபட்சமாக ரூ.95.89 க்கும் விலை போனது.

கடந்த வாரத்தை விட இந்த வாரம் கிலோவுக்கு ரூ.3 வரை விலை அதிகரித்துள்ளது. அதே நேரத்தில் இந்த வாரம் 359 மூட்டை வரத்து இருந்த நிலையிலும் விலை அதிகரித்துள்ளது, விவசாயிகளிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இதுகுறித்து ஒழுங்குமுறை விற்பனைக் கூட கண்காணிப்பாளர் மகேந்திரசிங் கூறுகையில், தற்போது வெயில் காலமாக இருப்பதால் வரத்து அதிகரித்துள்ளது; அதே நேரத்தில் கொப்பரையின் தேவையும் அதிகரித்துள்ளதால் தொடர்ந்து விலை உயர்ந்து வருகிறது என்றார்.

## உதகையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

உதகை:

நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் உதகையில் நடைபெற்றது.

ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கு ஆட்சியர் பி.சங்கர் தலைமை வகித்தார். கூட்டத்தின் தொடக்கத்தில் விவசாய சங்கங்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகள் உரிய துறை அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு, அவர்களிடமிருந்து பெறப்பட்ட விவரங்கள் தெரிவிக்கப்பட்டன.

தொடர்ந்து இக் கூட்டத்தில் நீலகிரி மாவட்ட விவசாயிகள் பயன்படுத்தும் விதைகள் மற்றும் மருந்து வகைகளின் தரத்தினை அறிய உதகை அரசினர் ரோஜா பூங்கா வளாகத்தில் விதை பரிசோதனை மையம் இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் வனவிலங்குகளால் விளைபொருட்களில் ஏற்படும் சேதத்தை தடுக்க வனப் பகுதிகளையொட்டியுள்ள இடங்களில் மின்வேலி அமைக்கப்படும் எனவும், கேத்தி பாலடா பகுதியில் ஊருக்குள் நுழையும் வனவிலங்குகளை மாற்று இடத்திற்கு விரட்ட வனத்துறை ஊழியர்களால் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் ஆட்சியர் உறுதி அளித்தார்.

## யானைகளை பாதுகாக்க விழிப்புணர்வு ஓவியப் போட்டி

உதகை:

உதகை நகர மக்கள் விழிப்புணர்வு சங்கத்தின் சார்பில் "யானைகளை பாதுகாப்போம்' என்ற தலைப்பில் விழிப்புணர்வு ஓவியப்போட்டி நடைபெற்றது.

உதகை ஒய்.டபிள்யூ.சி.ஏ. ஆனந்தகிரி அரங்கில் நடைபெற்ற இப் போட்டியில் பள்ளி மாணவ, மாணவியர் பங்கேற்றனர். இந் நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட தெற்கு கோட்ட வன அலுவலர் பத்ரசாமி கலந்து கொண்டார். தமிழக பசுமை இயக்கத்தின் செயலர் ஜெயச்சந்திரன் பேசுகையில், யானைகளை பாதுகாப்பதில்தான் இயற்கையின் ஆதாரம் அடங்கியுள்ளதாகத் தெரிவித்தார்.

உதகை நகர மக்கள் விழிப்புணர்வு சங்கத் தலைவர் ஜனார்த்தனன் பேசுகையில், யானைகளுக்கு எதிராக நடைபெறும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டுமென்றார்.

இப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு மாவட்ட வன அலுவலர் பத்ரசாமி பரிசளித்தார். முன்னதாக, ஒய்.டபிள்யூ.சி.ஏ. மேலாளர் டைட்டஸ் வரவேற்றார். முடிவில் ஆசிரியை சக்திபிரியா நன்றி கூறினார்.

ரூ.ஒரு கோடிக்கு மஞ்சள் விற்பனை

திருச்செங்கோடு:

திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ. ஒரு கோடிக்கு மஞ்சள் விற்பனையானது.

திருச்செங்கோடு கூட்டுறவு வேளாண் உற்பத்தியாளர்கள் விற்பனை நிலையத்துக்கு, ஆத்தூர், கெங்கவல்லி, கூகையூர், கள்ளக்குறிச்சி, பொம்மிடி, அரூர், ஜேடர்பாளையம், பரமத்திவேலூர், நாமக்கல், மேட்டூர், பூலாம்பட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 2,300 மூட்டை மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

மஞ்சளைக் கொள்முதல் செய்ய ஈரோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சேலம் ஆகிய பகுதிகளிலிருந்து 35-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் வந்திருந்தனர். இதில், விரலி குவிண்டாலுக்கு ரூ. 6,730 முதல் 7,779 வரையும், கிழங்கு ரகம் ரூ. 5,980 முதல் ரூ. 6,609 வரையும், பனங்காளி ரகம் ரூ. 9,900 முதல் 13,899 வரையும் ஏலம்

போனது. ஈரோடு மஞ்சள் சந்தையை விட குவிண்டாலுக்கு ரூ. 500 அதிகமாகவும், மொத்தம் ரூ. ஒரு கோடிக்கு மஞ்சள் ஏலம்போனது.

இந்தத் தகவலை கூட்டுறவு சங்கத்தின் மேலாண் இயக்குநர் லோகநாதன் தெரிவித்தார். விவசாயிகளுக்கு உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்பட்டது.

விவசாயக் கடனை தள்ளுபடி செய்யக் கோரிக்கை

புதுக்கோட்டை:

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கிய கடனை முழுவதும் தள்ளுபடி செய்ய வேண்டுமென தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடியில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் வட்டார நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு ஒன்றியத் தலைவர் கே. பழனிச்சாமி தலைமை வகித்தார்.

கூட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளில் போதிய மழை இல்லாததால் மாவட்டத்தில் கடும் வறட்சி நிலவி வருகிறது. இதனால் ஒரு படி நெல் கூட விளையவில்லை. எனவே புதுக்கோட்டை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். மேலும் விவசாயிகளுக்கு வழங்கிய கடனை முழுமையாக  தள்ளுபடி செய்ய வேண்டும்.

வட்டியில்லா கடனுக்கு வட்டி செலுத்த நிர்பந்திக்கும் வங்கி மற்றும் கூட்டுறவு நிர்வாகத்தின் மீது மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். பருவமழை தொடங்குவதற்கு முன்னதாகவே டெல்டா பகுதியில் பழுதடைந்த நிலையில் உள்ள சாலை, கால்வாய்களை சீரமைக்க வேண்டும்.

மணமேல்குடி பேருந்து நிறுத்தம் அருகே கட்டப்பட்டுள்ள பொதுக்கழிப்பறையை

மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. இதில் மாவட்டச் செயலர் எஸ். பொன்னுச்சாமி, ஒன்றியச் செயலர் கரு. ராமநாதன், காவிரி கடைமடை சங்க நிர்வாகி முத்துராமலிங்கன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

வேளாண் அலுவலர்கள் சங்கக் கூட்டம்

பெரம்பலூர்:

இரண்டாண்டு பட்டயக் கல்விக்கு இணையான ஊதியம் வழங்க வேண்டுமென, தமிழ்நாடு உதவி வேளாண் அலுவலர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் சந்திப்புக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

பெரம்பலூர் புறநகர்ப் பேருந்து நிலையம் அருகே உள்ள தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய அலுவலகக் கூட்டரங்கில் சங்கம் சார்பில் வேர்களைத்தேடி விழுதுகள் என்றத் தலைப்பில் சங்க உறுப்பினர்கள் சந்திப்புக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

சங்கத்தின் மாவட்டத் தலைவர் மனோகரன் தலைமை வகித்தார். மாநில பொதுச் செயலர் துரை. அருளானந்தம், அரசு அலுவலர் ஒன்றிய மாவட்டத் தலைவர் பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர். சங்கத்தின் மாநிலத் தலைவர் இசக்கிமுத்து சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில், இரண்டாண்டு பட்டயக் கல்விக்கு இணையான ஊதியம் வழங்க வேண்டும். பண்ணைக் குடும்பங்களுக்கு அதிகப்படியான மண் மாதிரிகள் சேகரிப்பதைக் குறைக்க வேண்டும். உதவி வேளாண் அலுவலர்கள் இணை அடங்கல் தயாரித்தலை நீக்க வேண்டும்.

பதவி உயர்வு வழங்குவதை உடனுக்குடன் நிறைவேற்றித் தர வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாவட்ட துணைத் தலைவர் மணி, மாவட்ட தணிக்கையாளர் இளையராஜா,

மகளிரணிச் செயலர் பாத்திமா, உதவி வேளாண் அலுவலர் இளையராஜா உள்பட பலர் பங்கேற்றனர்.

**கம்பம் பகுதியில் வெண்டைக்காய் விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி**

கம்பம்,

தேனி மாவட்டம் கம்பம், காமயகவுண்டன்பட்டி, அணைப்பட்டி, சுருளிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் தென்னை, திராட்சை, வாழைக்கு அடுத்தபடியாக பீட்ரூட், நூக்கல், முள்ளங்கி, பாகற்காய், வெண்டை உள் ளிட்ட காய்கறிகள் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. குறுகிய காலத்தில் அறுவடை செய்யப்படுவதால் பெரும்பாலான விவசாயிகள் இந்த பயிர்களை பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். நடவு செய்யப்பட்டு 45 நாட்களின் பலன் கொடுக்க ஆரம்பிக்கும் வெண்டைக்காய் இங்கு அதிக அளவில் விளை விக்கப்படுகிறது. ஒரு நாள் விட்டு ஒருநாள் ஒரு ஏக்கருக்கு 400 கிலோ வீதம் 40 முறை காய் பறிப்பு இருக்கும். இங்கு பறிக்கப்படும் காய் உள்ளூர் சந்தையிலும், கேரளாவிற்கும் அனுப்பி வைக்கப்படுகிறது. கடந்த மாதம் வரை கிலோ ரூ.10–க்கு விற்பனை செய்யப் பட்ட வெண்டைக்காய் தற்போது கிலோ ரூ.15 முதல் ரூ.20 வரை விற்பனை செய் யப்பட்டு வருகிறது. வெண் டைக்காய்க்கு போதிய விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழச்சி அடைந்து உள்ளனர்.

**வேலூர் மார்க்கெட்டில் வரலாறு காணாத அளவுக்கு பூக்களின் விலை சரிவு**

வேலூர் மார்க்கெட்டில் பூக்களின் விலை வரலாறு காணாத அளவுக்கு சரிவு ஏற்பட்டுள்ளது.

பூக்கள் விலை சரிவு

வேலூரில் மிகப்பெரிய அளவிலான பூமார்க்கெட் நேதாஜி மார்க்கெட்டுக்குள் அமைந்துள்ளது. ஒரே இடத்தில் காய்கறிகள், பூக்கள், பழங்கள் நேதாஜி மார்க்கெட்டில் கிடைப்பதால் அங்கு காலை முதல் இரவு வரை மக்கள் கூட்டம் அலைமோதி வருகிறது. இங்கு வரும் மக்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் காய்கறிகள், பூக்கள், பழங்கள் ஆகியவற்றை வாங்கிச்செல்கின்றனர். பூக்களை பொறுத்தவரை வேலூர் மல்லிகைக்கும் தனி சிறப்பு உண்டு. வேலூர் மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் கோடை காலத்தில் பூக்களின் விலை குறைந்து காணப்படும். ஆனால் இந்த ஆண்டு கோடைகாலம் தொடங்கும் முன்பே பூக்களின் விலை வெகுவாக குறைந்து இருந்தது. தற்போது கோடைகாலம் முடியும் நிலையில் பூக்களின் விலை வரலாறு காணாத அளவுக்கு சரிந்துள்ளது.ஒரு வாரத்திற்கு முன்பு கிலோ ரூ.250–க்கு விற்பனை செய்யப்பட்ட மல்லிகைப்பூ நேற்று கிலோ ரூ.40 முதல் 50 வரை விற்பனையானது. ரோஜா பூ ஒரு கிலோவின் விலை கடந்த வார விலையான 150–ல் இருந்து தற்போது 40–க்கும், கனாகாம்பரம் ஒரு கிலோ ரூ.500–ல் இருந்து ரூ.150–க்கும் விற்பனை செய்யப்படுகிறது. அதேபோல் முல்லை 200–ல் இருந்து 40– ஆக குறைந்துள்ளது. இதனால் பூ வியாபாரிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். பூக்களை பயிரிடும் விவசாயிகளுக்கும் கட்டுப்படியான விலை கிடைக்கவில்லை. பூக்களின் விலை கணிசமாக குறைந்துள்ளதால் பெண்கள் மிக ஆர்வத்துடன் பூக்களை வீட்டிற்கு வாங்கி செல்கின்றனர்.

அதிக விளைச்சல்

பூ விலை சரிவுக்கான காரணம் குறித்து வியாபாரி ஒருவர் கூறுகையில், “ வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள கிராம பகுதிகளில் மல்லிகைப் பூவின் விளைச்சல் எப்போதும் இல்லாத அளவுக்கு அமோகமாக உள்ளது.

இதனால் வேலூர் மாவட்டத்திற்கு அதிக அளவில் மல்லிகைப்பூக்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. மேலும் முல்லை, கனாகாம்பரம், பிச்சிப்பூ, ரோஜாப்பூ போன்ற பூக்கள் ஆந்திர, கர்நாடகா போன்ற மாநிலங்களில் இருந்து கொண்டு வரப்படுகிறது. தற்போது அவற்றின் வரத்தும் அதிகமாக காணப்படுகிறது. மேலும் ஆனி மாதங்களில் சுபமுகூர்த்த தினங்கள் அதிகம் இல்லாத காரணத்தாலும், கோவில்களில் திருவிழாக்கள் குறைந்ததாலும் பூக்கள் விலை கடும் வீழ்ச்சியடைந்துள்ளது. ஆனால் வருகிற காலங்களில் இதே நிலை தொடராது. ஏனென்றால் வருகிற நாட்களில் சுபநிகழ்ச்சிகள் அதிகமாக இருப்பதால் பூக்களின் விலை உயர வாய்ப்பு உள்ளது'' என்றார்.